## December 29, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. முப்படைகளின் தலைவரான குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, கர்நாடக மாநிலம், கர்வார் கடற்படைத் தளத்தில் உள்நாட்டுத் தயாரிப்பு நீர்மூழ்கிக் கப்பல் ஐஎன்எஸ் வாஷீரில் பயணம் மேற்கொண்டார். கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி குடியரசுத் தலைவருடன் சென்றார்.

    i. நீர்மூழ்கிக் கப்பலில் பயணித்த நாட்டின் முதல் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் (கடந்த 2006, ஐஎன்எஸ் சிந்து ரக்ஷக்). அவருக்குப் பிறகு நீர்மூழ்கியில் பயணித்த இரண்டாவது குடியரசுத் தலைவர் என்ற பெருமையை திரௌபதி முர்மு தனக்குச் சொந்தமாக்கியுள்ளார்.

    ii. முன்கள நீர்மூழ்கி: இந்திய கடற் படையின் முன்கள நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன்எஸ் வாஷீர், பி75 ஸ்கார்பீன் திட்டத்தின்கீழ் உள்நாட்டில் கட்டப்பட்ட 6-ஆவது மற்றும் கடைசி நீர்மூழ்கியாகும். இந்தக் கப்பல் கடந்த ஜனவரியில் கடற்படையில் இணைக்கப்பட்டது.

    iii. எதிரி கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிகள் எதிர்ப்பு, உளவுத்தகவல் சேகரிப்பு, கடல் பகுதி ரோந்து, பிற பிரத்யேக நடவடிக்கைகள் உள்பட பன்முக செயல்திறன் கொண்டதாகும்.

    iv. உலக அளவில் ஒப்பிடுகையில், மிகவும் சலனமின்றி செயலாற்று வதுடன், டீசல்-மின்சார என்ஜின் மூலம் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களில் ஒன்றாகும்.

    v. ஆயுதங்களும், தொழில்நுட்பமும் - இலக்குகளை விரட்டிச் சென்று தாக்கக் கூடிய வெடிகுண்டுகள், கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள், மேம்படுத்தப்பட்ட சோனார் அமைப்புமுறைகளுடன் கூடிய ஐஎன்எஸ் வாஷீர், எதிர்காலத்தில் மேம்படுத்தக் கூடிய 'ஏர் இண்டிபெண்டன்ட் புரொபல்ஷன்' (ஏஐபி) தொழில்நுட்பத்தையும் கொண்டது.

    vi. இந்திய பெருங்கடல் பகுதியில் நாட்டின் நலன்களைக் கருத்தில் கொண்டு, கர்வார் கடற்படைத் தளம் மேம்படுத்தப்பட்டு வரும் நிலையில், அங்கு நீர்மூழ்கிக் கப்பலில் முர்மு பயணம் மேற்கொண்டுள்ளார்.

    vii. தொடரும் பெருமைகள்: தனது பதவிக் காலத்தில் விமானப் படையின் இரு போர் விமானங்களில் பயணித்த முதல் குடியரசுத் தலைவர் என்ற சிறப்புக்குரியவர் முர்மு. கடந்த 2023-இல் சுகோய் 30 எம்கேஐ, கடந்த அக்டோபரில் ரஃபேல் என இரண்டு போர் விமானப் பயணங்களை அவர் மேற்கொண்டார்.

    viii. இப்போது நீர்மூழ்கியில் பயணித்து புதிய பெருமையைப் பெற்றுள்ளார்.

2. இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோவுக்கு 2025-ஆம் ஆண்டு ஒரு சாதனை ஆண்டு. கடைசியாக கடந்த டிசம்பர் 24-ஆம் தேதி எல்விஎம்-3 ராக்கெட் மூலம் அதிக எடை கொண்ட செயற்கைக்கோளை விண்வெளியில் செலுத்தி

வெற்றிகரமாக நிலைநிறுத்தியதன் மூலம் அந்தச் சாதனையில் மேலும் ஒரு மணிமகுடம் சூட்டப்பட்டிருக்கிறது.

i. அமெரிக்காவைச் சேர்ந்த ஏஎஸ்டி ஸ்பேஸ்மொபைல் நிறுவனத்தின் ப்ளூபேர்ட்-6 எனப்படும் அந்தத் தகவல் தொடர்பு செயற்கைக்கோள் 6,100 கிலோ எடை கொண்டது. வெளிநாட்டு செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் இஸ்ரோவின் நியூஸ் பேஸ் இந்தியா லிமிடெட் நிறுவனம், ப்ளூபேர்ட் செயற்கைக்கோளை வெற்றிகரமாகச் செலுத்தியது.

ii. ப்ளூபேர்ட்-6 செயற்கைக்கோள் விண்வெளியில் இருந்து நேரடியாக கைப்பேசிகளுக்கு அதிவேக இணைய சேவையை வழங்கும். இதன்மூலம் சிக்னல் கோபுரங்கள் இல்லாத அடர்ந்த காடுகள், மலைப் பகுதிகளில், நீர்த்தடங்களில் 5ஜி வேகத்தில் இணையம், விடியோ அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்தி சேவைகளைப் பெற முடியும்.

iii. ப்ளூபேர்ட்-6 செயற்கைக்கோள் வெற்றியின் மூலம் 1993-ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை 34 நாடுகளின் 434 செயற்கைக்கோள்களை செலுத்திய பெருமையை இஸ்ரோ பெற்றுள்ளது. அதிலும், அதிக எடையுள்ள செயற்கைக்கோளை செலுத்தியதன் வாயிலாக சர்வதேச அளவில் இஸ்ரோவின் வர்த்தக மதிப்பு உயர்ந்திருப்பது இந்தியாவுக்கு கிடைத்திருக்கும் பெருமை.

iv. அதிக எடை கொண்ட செயற்கைக்கோள்களைச் செலுத்துவதற்காகவே ஜிஎஸ்எல்வி மார்க் 3 அல்லது எல்விஎம்-3 என அழைக்கப்படும் அதிநவீன ராக்கெட்டை இஸ்ரோ உருவாக்கியுள்ளது. இதன் வாயிலாக புவி தாழ்வட்டப் பாதையில் 8,000 கிலோ எடை கொண்ட செயற்கைக்கோள்களையும், ஒத்திசைவுப் பாதையில் 4,000-க்கும் அதிகமான எடை கொண்ட செயற்கைக்கோள்களையும் நிலைநிறுத்த முடியும்.

v. எல்விஎம்-3 ராக்கெட் மூலம் 6,100 கிலோ எடை கொண்ட செயற்கைக்கோள் வெற்றிகரமாக செலுத்தப்பட்டிருப்பது, மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்துக்கு உத்வேகமாக அமையும். எல்விஎம் 3 ராக்கெட்டின் 9-ஆவது வெற்றிகரமான இந்தப் பயணத்தின் மூலம் எல்விஎம் 3 ராக்கெட் 100 சதவீத நம்பகத்தன்மையைப் பெற்றுள்ளது.

vi. ப்ளூபெர்ட் பிளாக்-2 மிஷன் எல்விஎம்-3 ராக்கெட்டின் 6-ஆவது வெற்றியாகும். ஜிசாட்-19 என்கிற தகவல் தொடர்பு செயற்கைக்கோளை 2017-ஆம் ஆண்டு விண்வெளியில் நிலை நிறுத்தியதன்மூலம் அதன் வெற்றிப் பயணம் தொடங்கியது. அதே ராக்கெட் மூலம் 3,850 கிலோ எடை கொண்ட சந்திரயான்-2 விண்கலத்தை புவியின் வளிமண்டலத்துக்கு வெளியே 2019-ஆம் ஆண்டிலும், சந்திரயான்-3 விண்கலத்தை 2023-ஆம் ஆண்டிலும் செலுத்தி விஞ்ஞான உலகின் புருவத்தை உயர்த்த வைத்தது இஸ்ரோ.

vii. பிரிட்டனைச் சேர்ந்த ஒன்வெப் நிறுவனத்தின் 72 செயற்கைக் கோள்களை எல்விஎம்-3 ராக்கெட் மூலம் இஸ்ரோ செலுத்தியுள்ளது. தலா 36 செயற்கைக்கோள்கள் என 2022 அக்டோபரிலும், 2023 மார்ச்சிலும்

வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டது. ப்ளூபேர்ட் செயற்கைக்கோளுக்கு முன்னதாக கடந்த நவம்பரில் சிஎம்எஸ்-3 என்கிற 4,400 கிலோ எடை கொண்ட தகவல் தொடர்பு செயற்கைக்கோளை எல்விஎம்-3 ராக்கெட் மூலம் இஸ்ரோ விண்வெளியில் நிலை நிறுத்தியது.

viii. இஸ்ரோவின் அதிக சக்தி வாய்ந்த ராக்கெட் தயாரிப்புப் பயணம் 1980-இல் தொடங்கியது. 35 கிலோ எடை கொண்ட ரோகிணி (ஆர்எஸ்-1) என்ற சோதனை செயற்கைக்கோளை எஸ்எல்வி-3 ராக்கெட் மூலம் செலுத்தியது. அதன்பிறகு ஏஎஸ்எல்வி, பிஎஸ்எல்வி, ஜிஎஸ்எல்வி என இஸ்ரோவின் ராக்கெட் தயாரிப்பு பரிமாணம் வேகமெடுத்தது.

ix. இஸ்ரோவின் கனவுத் திட்டமான ககன்யான் திட்டத்தையும் எல்விஎம்-3 ராக்கெட் மூலம் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ககன்யான் விண்கலம் மூலம் செலுத்தப்படும் விண்வெளி வீரர்கள் புவியிலிருந்து 400 கி.மீ. சுற்றுப்பாதையில் மூன்று நாள்கள் ஆய்வு செய்வார்கள். பின்னர், மீண்டும் அதே விண்கலம் மூலம் பாதுகாப்பாக தரையிறக்கப்படுவார்கள். இதுதான் ககன்யான் திட்டத்தின் இலக்கு.

x. ககன்யான் திட்டத்தின் மூலம் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் முன்னர், 'வியோமித்ரா' என்ற பெண் தோற்றம் கொண்ட ரோபோவை எல்விஎம்-3 ராக்கெட் மூலம் விண்வெளிக்கு அனுப்ப இஸ்ரோ தயாராகியுள்ளது. இதற்கான அனைத்துக் கட்ட சோதனைகளும் நிறைவடைந்து எப்போது வேண்டுமானாலும் வியோமித்ராவை விண்வெளிக்குச் செலுத்த தயார் நிலையில் உள்ளது இஸ்ரோ.

xi. வியோமித்ரா சோதனை வெற்றியடைந்தால், அடுத்தகட்டமாக ககன்யான் திட்டத்துக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள விண்வெளி வீரர்கள் விண்வெளிக்கு அனுப்பப்படுவார்கள். அதன்மூலம் தங்கள் சொந்த நாட்டு விண்வெளி வீரர்களை விண்வெளிக்கு அனுப்பிய அமெரிக்கா, ரஷியா, சீனாவின் வரிசையில் இந்தியாவும் இடம்பெறும்.

xii. எதிர்காலத்தில் சொந்தமாக விண்வெளி நிலையத்தை அமைக்கவும் இஸ்ரோ திட்டமிட்டு வருகிறது. பாரதிய அந்தரீக்ஷ நிலையம் எனப் பெயரிடப்பட்டுள்ள அந்தத் திட்டத்துக்கான கனவுகளைச் சுமக்கத் தயாராகி வருகிறது எல்விஎம்-3.

3. மியான்மரில் ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர், முதல் முறையாக அங்கு பொதுத் தேர்தல் நடைபெற்றது.

i. 2021-இல் ராணுவம் ஆட்சி கைப்பற்றிய பின்னர், அந்த நாட்டில் ராணுவ ஜெனரல் மின் ஆங் லெயிங் அடக்குமுறையுடன் ஆட்சி செய்துவரும் நிலையில், தேர்தலுக்குப் பிறகு அவரே அதிபராகப் பதவியேற்பார் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

ii. மியான்மரில் கடந்த 5 ஆண்டுகளில் நடைபெறும் முதல் தேர்தல் இதுவாகும்.

iii. கடந்த 2021-இல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங் சான் சூகியின் அரசை

ராணுவம் கவிழ்த்தது. அதற்கு எதிரான போராட்டங்கள் உள்நாட்டுப் போராக மாறியது.

iv. அதற்கேற்ப, ராணுவத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்ட யூனியன் சாலிடாரிட்டி அண்ட் டெவலப்மெண்ட் பார்ட்டி (யூஎஸ்டிபி) பெரும் வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

v. ஆசிய நாடுகள் கூட்டமைப்பை (ஆசியான்) திருப்திப்படுத்தவும், மியான்மர் ராணுவ அரசுக்கு அண்டை நாடுகளான இந்தியா, சீனா, தாய்லாந்து ஆகியவை அளித்துவரும் ஆதரவை நியாயப்படுத்தவும் இந்தத் தேர்தல் நடத்தப்படுவதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

4. இந்திய விமானப் படைக்கு தங்களது சி-130 ஜே சூப்பர் ஹெர்குலீஸ் ராணுவ விமானம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என அமெரிக்க நிறுவனமான லாக்ஹீட் மார்ட்டின் நிறுவனத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

i. 80 ராணுவப் போக்குவரத்து விமானங்களைக் கொள்முதல் செய்ய இந்தியா தயாராகிவரும் நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ii. தற்போது 'க்வாட்' உறுப்பு நாடுகளில் இந்தியா மட்டுமன்றி ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய 4 நாடுகளும் சீ-130 ஜே ரக விமானத்தைப் பயன்படுத்தி வருகின்றன என்றார்.

iii. 560 சி-130 ஜே சூப்பர் ஹெர்குலீஸ் ரக விமானங்களை 23 நாடுகளுக்கு லாக்ஹீட் மார்ட்டின் விநியோகித்துள்ளது. இந்தியாவில் 12 சி-130ஜே ரக விமானங்கள் தற்போது இயக்கப்படுகின்றன.

iv. போட்டியில் வெளிநாட்டு நிறுவனங்கள்: ஏஎன்-32 மற்றும் ஐஎல்-76 ரக ஆகிய ராணுவப் போக்குவரத்து விமானங்களுக்கு மாற்றாக புதிய விமானங்களைக் கொள்முதல் செய்ய கடந்த 2022- இல் இந்தியா முடிவு செய்தது.

v. அதன்படி 80 விமானங்களைக் கொள்முதல் செய்யும் திட்டத்துக்கு பாதுகாப்புக் கொள்முதல் கவுன்சில் (டிஏசி) விரைவில் ஒப்புதல் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

vi. இந்நிலையில், இந்த விமான ஒப்பந்தத்தைப் பெற அமெரிக்காவைச் சேர்ந்த லாக்ஹீட் மார்ட்டின் நிறுவனம், பிரேஸில் நாட்டைச் சேர்ந்த எம்ப்ரேயர் நிறுவனம் (கேசி-390 விமானம்), ஐரோப்பாவைச் சேர்ந்த ஏர்பஸ் பாதுகாப்பு மற்றும் விண்வெளி நிறுவனம் (ஏ-400 எம்) ஆகிய நிறுவனங்கள் முனைப்புக்காட்டி வருகின்றன.

vii. டாடா நிறுவனத்துடன் இணைந்து இந்தியாவில் சி-130- ஜே ரக விமானங்களின் பாகங்களை லாக்ஹீட் மார்ட்டின் தயாரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

5. மத்திய அரசு கொண்டு வந்துள்ள புதிய கலால் வரி சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், சிகரெட் மற்றும் புகையிலைப் பொருள்களின் விலை வரலாறு காணாத வகையில் உயரவுள்ளது. இதன்

விளைவாக, தற்போது ரூ.18-க்கு விற்கப்படும் ஒரு சிகரெட்டின் விலை ரூ.72 வரை உயர வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

i. கடந்த டிச. 1 முதல் 19-ஆம் தேதி வரை நடைபெற்ற நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரில், புகையிலைப் பொருள்களுக்கான வரி விதிப்பில் மாற்றங்களைக் கோரும் மசோதா தாக்கல் செய்யப்பட்டது. சிகரெட், ஹுக்கா, ஜர்தா போன்ற புகையிலை பொருள்களுக்கு கூடுதல் கலால் வரி விதிக்க வழிவகை செய்யும் இந்த மசோதா, இரு அவைகளிலும் விவாதிக்கப்பட்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

ii. புகையிலைக்கான வரி 25 சதவீ தத்திலிருந்து 100 சதவீதமாக உயர்த்தப்படும். ஹுக்காவிற்கான வரி 25 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக அதிகரிக்கப்படும். அதிகபட்சமாக, புகையிலைச் சேர்மானங்களுக்கான வரி 60 சதவீதத்திலிருந்து 300 சதவீதமாக 5 மடங்கு உயர்த்தப்படும்.